**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
முன்னிலை : **திருமதி.எஸ்.பிரவீனா, M.A., L.L.M.,**
நீதித்துறை நடுவர், ஒட்டன்சத்திரம்.
2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13 ஆம் நாள் வியாழக்கிழமை

**Crl.M.P. No.301/2026**
**in**
**Crl.M.P.No.500/2025**
**in**
**D.V.C.No.06/2023**

சிவக்குமார் வீராச்சாமி (46/2026)
த/பெ.வீராச்சாமி ... மனுதாரர்

/எதிர்/

வீரலட்சுமி (40/2026)
த/பெ.ராஜமாணிக்கம், க/பெ.சிவக்குமார் ... எதிர்மனுதாரர்

இம்மனு இறுதி விசாரணைக்காக 29.07.2026 ஆம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்னர் வரப்பெற்று மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.பழனிவேல்,பி.ஏ.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்.திரு.L.கதிரவன்,பி.ஏ.,எல்.எல்.பி., அவர்கள் ஆஜராகியும், ஆவணங்கள் அனைத்தும் பார்வையிட்டு, பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

30.03.2026 ஆம் தேதியிட்ட உத்தரவில் விதிக்கப்பட்ட செலவு தொகையை செலுத்துவதற்கான கால நீட்டிப்பு கேட்டும், காலதாமதத்தை மன்னிக்குமாறு கோரியும் மனுதாரரால் இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **மனுவின் சுருக்கம்** : கடந்த 03.03.2025 ஆம் தேதியன்று மனுதாரர்/எதிர்மனுதாரரை ஒருதலைப்பட்சமாக கருதி கடந்த 20.05.2025 ஆம் தேதியன்று மனுதாரர்/எதிர்மனுதாரருக்கு எதிராக ஒருதலைப்பட்சமாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும், மேற்படி ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்யக் கோரி Crl.M.P.500/2025 என மனு தாக்கல் செய்து அதனுடன் மனுதாரர்/எதிர்மனுதாரரின் மருத்துவ சான்றுகள் வைக்கப்பட்டிருந்தது என்றும், மேற்படி மனுவையும் அதனுடன் தாக்கல் செய்யப்பட்டிருந்த மருத்துவ ஆவணங்களையும் பரிசீலனை செய்து கடந்த 30.03.2023 ஆம் தேதியிட்ட உத்தரவில், செலவு தொகையான ரூ.5000/−ஐ

இம்மனுவின் மனுதாரர்/எதிர்மனுதாரர், எதிர்மனுதாரர்/மனுதாரருக்கு 08.04.2026 ஆம் தேதிக்குள் வழங்கிட வேண்டும் என்று நிபந்தனையின்பேரில் கடந்த 20.05.2023 ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவு நீக்கம் செய்யப்படும் என்றும், தவறும்பட்சத்தில் ஒருதலைப்பட்ச உத்தரவு அமலில் இருக்கும் என்றும் உத்தரவு பிறப்பட்டிருந்தது என்றும், ஆனால், 08.04.2026 ஆம் தேதிக்குள் ரூ.5000/–ஐ செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையை செலுத்தவில்லை என்றும், மேற்படி நிபந்தனையை செலுத்ததாதற்கான காரணம் மனுதாரர்/எதிர்மனுதாரரின் உடல்நலக் குறைவால் KIMS HOSPITAL & RESEARCH CENTRE–ல் கடந்த 15.03.2026 ஆம் தேதி முதல் 19.03.2026 ஆம் தேதி வரையிலும், அதன்பின்னர் 26.03.2026 முதல் 31.03.2026 ஆம் தேதி வரையிலும் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளார் என்றும், அதன்பின்னர், 17.04.2026 ஆம் தேதியன்று அறுவை சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டு அன்றைய தினமே அறுவை சிகிச்சை செய்து மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார் என்றும், மேற்படி காரணங்களால், நிபந்தனையான செலவுத் தொகை ரூ.5000/–ஐ மனுதாரரால் எதிர்மனுதாரருக்கு செலுத்த இயலாமல் போய்விட்டது என்றும், எனவே, மேற்படி நிபந்தனை தொகையான ரூ.5000/–ஐ செலுத்துவதற்கு கால நீட்டிப்பு கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **எதிருரையின் சுருக்கம் :** எதிருரையில், மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு பொய்யும், மோசடியுமாகும் என்றும், மனுதாரின் மனுவானது சட்டப்படியும், நியாயப்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், மனுதாரர் மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளில் இந்த எதிர்மனுதாரரால் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளைத் தவிர மற்றவை யாவும் வன்மையாக ஆட்சேபனை செய்யப்படுகிறது என்றும், இந்த எதிர்மனுதார்கள், மனுதாரர் மீது ஜீவனாம்ச பரிகாரம் கோரி சமூக நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்ததில், இந்த மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தால், கடந்த 26.07.2023 ஆம் தேதியன்று சமூக நீதிமன்றத்தால் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும், இந்த மனுதாரர் மேற்படி உத்தரவை ரத்து செய்ய வேண்டி மனுத்தாக்கல் செய்து, மேற்படி மனுவும்

அனுமதிக்கப்பட்டது என்றும், அதன்படி இந்த மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராகி வழக்கை நடத்தி வந்தார் என்றும், இந்நிலையில், இந்த மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யாத காரணத்தால் இந்த மனுதாருக்கு எதிராகக் கடந்த 12.10.2023 ஆம் தேதி மீண்டும் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும், இந்த மனுதாரர் மீண்டும் மேற்படி உத்தரவை ரத்து செய்ய வேண்டி மனு தாக்கல் செய்ததில், மேற்படி மனுவானது இந்த மனுதாரர், எதிர்மனுதாருக்கு ரூ.5000/- செலுத்தும்பட்சத்தில், மேற்படி மனு அனுமதிக்கப்படும் என நிபந்தனை பிறப்பிக்கப்பட்டது என்றும், இந்த மனுதாரரும், சமூக நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின்படி எதிர்மனுதாரர்கள் வசம் ரூ.5000/-யை செலுத்தியதன் காரணமாக மனுதாரரால் தாக்கல் செய்த ஒருதலைபட்ச உத்தரவு மனு அனுமதிக்கப்பட்டது என்றும், அதன்படி, இந்த மனுதாரர் எதிருரை தாக்கல் செய்து, பின்னிட்டு, இந்த எதிர்மனுதாரர்கள் தரப்பில் ம.சா.1 விசாரிக்கப்பட்டு, மனுதாரர் தரப்பு சாட்சி முடிக்கப்பட்டு, எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி முன்னிலைப்படுத்தாமல் மீண்டும் கடந்த 20.05.2025 ஆம் தேதி இந்த மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும் கூறப்பட்டுள்ளது.

**3.** அதனைத் தொடர்ந்து, இந்த மனுதாரர் மேற்படி உத்தரவை ரத்து செய்ய வேண்டி சமூக நீதிமன்றத்தில் கடந்த 08.07.2025 ஆம் தேதி மனுத் தாக்கல் செய்ததில், மேற்படி மனுவானது Crl.M.P.No.500/2025-ல் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, கடந்த 30.03.2026 ஆம் தேதி இந்த மனுதாரர், எதிர்மனுதார்களுக்கு கடந்த 08.04.2026 ஆம் தேதிக்குள் ரூ.5000/-யை செலுத்தும்படிக்கும், தவறும்பட்சம் மேற்படி மனு தள்ளுபடி செய்யப்படும் என்றும், சமூக நீதிமன்றத்தால் மேற்படி மனு நிபந்தனைகளுடன் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும், இந்த மனுதாரர் சமூக நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை மதிக்காத காரணத்தால், மேற்படி மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், மேலும், இந்த எதிர்மனுதாரர்கள் அசல் மனுவில் சமூக நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை நிறைவேற்றும் பொருட்டு, மனுத் தாக்கல் செய்து, மேற்படி மனு Crl.M.P.No.193/2026-ல் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இந்த மனுதாருக்கு நீதிமன்றம் மூலம் அழைப்பாணை அனுப்பப்பட்டு, இந்த மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராகாத

காரணத்தால், இந்த மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

**4.** அதனைத் தொடர்ந்து, மேற்படி சங்கதிகள் அனைத்தையும் மறைத்து, இந்த மனுதாரர் இந்த மனுவை மிக எளிமையாக கடந்த 24.06.2026 ஆம் தேதி தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி மனுவில் மனுதாரர் தரப்பில் கூறியுள்ள விளக்கமாவது யாதெனில், மனுதாரர் பெங்களூரில் உள்ள கிம்ஸ் மருத்துவமனையில் கடந்த 15.03.2026 முதல் 19.03.2026 ஆம் தேதிவரை உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டிருந்ததாகவும், மேலும் கடந்த 17.04.2026 ஆம் தேதி மேற்படி மருத்துவமனையில் அறுவை சிகிச்சை மேற்கொண்டதாகவும் குறிப்பிட்டுள்ளார் என்றும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவில் சமூக நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு தேதியான கடந்த 30.03.2026 ஆம் தேதி முதல் கடந்த 08.04.2026 ஆம் தேதிவரை உள்ள நாட்களில் மனுதாரர் எவ்வித சிகிச்சையிலும் இல்லை என்பது மனுதாரராலேயே குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், மேலும், மனுதாரரின் தகப்பனார் வீராச்சாமி அவர்கள் சமூக நீதிமன்றத்தில் உள்ள அனைத்து வழக்கிற்கும் ஒருநாள் கூட தவறாமல் நீதிமன்றத்தில் ஆஜராகி, இந்த மனுதாரருக்காக தானே முன்னின்று வழக்கில் ஆஜராகி நீதிமன்றத்தில் விளக்கமளித்துள்ளார் என்பது நீதிமன்றத்திற்கே தெரிந்த ஒன்றாகும் என்றும் கூறப்பட்டுள்ளது.

**5.** மேலும், இந்த மனுதாரர் தரப்பில் தாவா மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள 2, 3 ஆவது ஆவணங்களில் மருத்துவமனையின் முத்திரையோ, மருத்துவரின் கையொப்பமோ எதுவும் இல்லை என்றும், மேலும், மேற்படி ஆவணத்தில் அறுவை சிகிச்சை எடுத்துக்கொண்டதாக எவ்வித குறிப்பும் இல்லை என்றும், இந்த மனுதாரர் தரப்பில் 4 ஆவது ஆவணமாக தாக்கல் செய்துள்ளதில் ஒரே நாளான 17.04.2026 ஆம் தேதியில் அறுவை சிகிச்சை எடுத்துக்கொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், மேற்படி சிகிச்சையானது மிக தீவிரமாக இருந்திருந்தால், ஒரே நாளில் டிஸ்சார்ஜ் செய்ய இயலாது என்றும், மேலும், 5 ஆவது ஆவணத்தில் உள்ள தேதிக்கும் இந்த மனுவிற்கும் எந்த சம்மந்தமுமில்லை என்றும், எனினும், 5 ஆவது ஆவணத்தில் உள்ளது போல, 2, 3 ஆவது ஆவணத்தில் எவ்வித

முத்திரையோ, கையொப்பமோ இல்லை என்றும், எனவே, மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் சட்டப்படி ஏற்புடையதாக இல்லை என்றும், மனுதாரர் அவரே ஒரு போலியான ஆவணத்தை உற்பத்தி செய்து சமூக நீதிமன்றத்தை ஏமாற்றும் வகையில் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார் என்றும் கூறப்பட்டுள்ளது.

6. மேலும், உண்மை இவ்வாறிருக்க இந்த மனுதாரர் எதிர்மனுதாரரிடமிருந்து விவாகரத்துப் பெற வேண்டி தாக்கல் செய்து, ஒட்டன்சத்திரம் சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வரும் HMOP NO. 71/2025 வழக்கை மட்டும் துரிதமாக நடத்தி வருகிறார் என்றும், மனுதாரர் வழக்கை நடத்தாமல் காலம் தாழ்த்தும் எண்ணத்துடன் வீண் அலைக்கழிவு செய்தும், மனைவி, குழந்தைகளை பராமரிக்கமலும், சட்டத்தின் பிடியில் இருந்து தப்பிக்க எண்ணியும் தொடர்ந்து பல்வேறு மனுக்களைத் தாக்கல் செய்து வருகிறார் என்றும், ஆகையால், இந்நீதிமன்றம் எதிர்மனுதார்கள் தாக்கல் செய்துள்ள எதிருரையை ஏற்று, இந்த எதிர்மனுதாரரின் அதிகபட்ச செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமாய் கூறப்பட்டுள்ளது.

7. **மனுதாரர் தரப்பு வாதம்** : இம்மனுவின் மனுதாரர் உடல்நலக் குறைவால் KIMS HOSPITAL & RESEARCH CENTRE-ல் கடந்த 15.03.2026 ஆம் தேதி முதல் 19.03.2026 ஆம் தேதி வரையும், அதன்பின்னர் 26.03.2026 முதல் 31.03.2026 ஆம் தேதி வரை உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு அதன்பின்னர், 17.04.2026 ஆம் தேதியன்று அறுவை சிகிச்சை மேற்கொண்டதால், மேற்படி நிபந்தனையான ரூ.5000/- எதிர்மனுதாரர்/மனுதாரருக்கு செலுத்த இயலாமல் போய்விட்டது எனவும், அதனால், தற்போது அந்த ரூ.5000/-ஐ எதிர்மனுதாரருக்கு செலுத்த கால நீட்டிப்பு வழங்குமாறு மனுதாரர் தரப்பில் வாதம் முன்வைக்கப்பட்டது.

8. **எதிர்மனுதாரர் தரப்பு வாதம்** : இம்மனு எழும்பியுள்ள முக்கிய D.V.C.No.6/2023 வழக்கானது, கடந்த 2023 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டது என்றும், மேற்படி குடும்ப வன்முறை தடுப்புச் சட்டத்தின் கீழான வழக்கில் மனுதாரர்/எதிர்மனுதாரருக்கு நீதிமன்றத்தில் இருந்து அனுப்பப்பட்டிருந்த அறிவிப்பை பெற்றுக் கொண்டு நீதிமன்றத்தின் முன்பு ஆஜராகாத காரணத்தினாலும், கடந்த 20.05.2025 ஆம் தேதியன்று இம்மனுவின் மனுதாரர்/எதிர்மனுதாரருக்கு எதிராக இந்த

நீதிமன்றத்தால் ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும், அந்த உத்தரவை ரத்து செய்யும் பொருட்டு, மனு அனுமதிக்கப்பட்டு நிபந்தனையாக செலவு தொகை ரூ.5,000/– குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள் செலுத்தாமல் இந்த நீதிமன்றம் விதித்த உத்தரவை பின்பற்றாமல் மனுதாரர்/எதிர்மனுதாரர் நடந்ததாகவும், மேற்படி மனுதாரர்/எதிர்மனுதாரர் பொய்யான மருத்துவ சான்றுகளை தாக்கல் செய்து, செலவுத் தொகையை செலுத்த கால நீட்டிப்பு கேட்பதாகவும், மேற்படி கால நீட்டிப்பு மனுவானது வழக்கில் காலதாமதம் ஏற்பட வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், நிபந்தனையை நிறைவேற்ற கால அவகாசம் இருந்தும், அதை வேண்டும் என்றே நிறைவேற்றாமல் இருந்து வந்துள்ளார் என்றும், மேற்படி 20.05.2025 ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்யக் கோரி கடந்த 08.07.2025 ஆம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்ட Crl.M.P.No.500/2025 என்ற மனு 30.03.2026 ஆம் தேதியன்று இம்மனுவின் மனுதாரர்/எதிர்மனுதாரர் ரூ.5000/– எதிர்மனுதாரர்/மனுதாரருக்கு 08.04.2025 ஆம் தேதிக்குள் செலுத்த வேண்டுமென்றும், தவறும் பட்சத்தில், மேற்படி ஒருதலைப்பட்ச உத்தரவானது அமலில் இருக்கும் என்று உத்தரவிட்டுள்ளது என்றும், மேற்படி மனுதாரர்/எதிர்மனுதாரர் தாக்கல் செய்த மருத்துவ சான்றுகளில் மருத்துவரின் கையொப்பம் எதுவும் இல்லை என்றும், இந்த மனுவானது இந்த வழக்கை நடத்தவிடாமல் தடுக்க வேண்டுமென்ற தீய எண்ணத்துடன் மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இந்த மனு அனுமதிக்கப்பட்டால் எதிர்மனுதாரர்/மனுதாரருக்கு பெரும் பாதிப்பு ஏற்படும் என்றும், அதனால், மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும், எதிர்மனுதாரர்/மனுதாரர் தரப்பில் வாதம் முன்வைக்கப்பட்டது.

9. **தீர்வு** : மனுதாரர்/எதிர்மனுதாரர் ரூ.5000/–ஐ செலுத்துவதற்கு கால அவகாசம் கோரி தாக்கல் செய்துள்ள இந்த மனு அனுமதிக்கப்படதக்கதா என்பதே ஆகும்.

**10.** மனு, மனு உடன் கூடிய ஆவணங்கள், எதிருரை அனைத்தும் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. இந்த

மனுவானது கடந்த 30.03.2026 ஆம் தேதின்று இந்த நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் நிபந்தனையை 08.04.2026 ஆம் தேதிக்குள் நிறைவேற்றாமல் தற்போது செலவுத் தொகையான ரூபாய் 5,000/-ஐ செலுத்த கால அவகாசம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்/எதிர்மனுதாரர் அவரது மனுவில் மனுதாரருக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டதாகவும், அதனால்தான் குறிப்பிட்ட காலத்திற்குள் எதிர்மனுதாரருக்கு ரூ.5,000/-ஐ செலுத்த முடியாமல் போய்விட்டதாகவும், அதற்கான மருத்துவ சான்றுகளையும் இம்மனுடன் தாக்கல் செய்துள்ளார்.

**11.** மேற்படி மருத்துவ சான்றுகளை கவனமாக பரிசீலனை செய்ததில், மனுதாரர் கடந்த 15.03.2026 ஆம் தேதி முதல் 19.03.2026 ஆம் தேதி வரை பெங்களூரில் உள்ள கே.ஐ.எம்.எஸ் ஹாஸ்பிடல் அண்ட் ரிசர்ச் சென்டர் என்ற மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று இருப்பதை அறிய முடிகிறது. அதன்பின்னர் 26.03.2026 ஆம் தேதி முதல் 31.03.2026 ஆம் தேதி வரை உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று இருப்பதை அறிய முடிகிறது. மேற்படி மனுதாரர் கடந்த 17.04.2026 ஆம் தேதி அன்று அனுமதிக்கப்பட்டு, அன்றைய தினமே மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள நான்காவது ஆவணத்தில் அறுவை சிசிகிச்சையின் நாள் 17.04.2026 என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் மனுதாரருக்கு என்ன வகையான அறுவை சிகிச்சை செய்தார்கள் என்ற விவரம் எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை. மனுதாரர் ஒரே நாளில் அனுமதிக்கப்பட்டு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு அதே நாளில் மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார் என்று வழங்கப்பட்டுள்ள சான்று நம்பும்படியாக இல்லை என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. மேலும், உத்தவின்படி செலவுத் தொகையை செலுத்துவதற்கான 01.04.2026 ஆம் தேதி முதல் 08.04.2026 ஆம் தேதி வரையிலான கால இடைவெளியில் மனுதாரர்/எதிர்மனுதாரருக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டதாகவோ, அல்லது என்ன காரணத்தினால் உத்தரவை நிறைவேற்றவில்லை என்பதற்கான சரியான விளக்கம் எதுவும் மனுதாரர்/எதிர்மனுதாரரால் முன்வைக்கப்படவில்லை.

**12.** கடந்த 30.03.2026 ஆம் தேதி அன்று இந்த நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் 08.04.2026 ஆம் தேதிக்குள் இம்மனுவின் மனுதாரர்/எதிர்மனுதாரர் எதிர்மனுதாரர்/மனுதாரருக்கு ரூ.5000/−ஐ செலுத்தி வைக்க வேண்டும் என்றும் அதை தவறும் பட்சத்தில், ஒரு தலைப்பட்ச உத்தரவு ரத்து செய்யப்படாமல் அமலிலே இருக்கும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி மனுதாரர் தாக்கல் செய்துள்ள மருத்துவ சான்றுகளை வைத்து பார்க்கும்போது, கடைசியாக மனுதாரர் 31.03.2026 ஆம் தேதி அன்று மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். அதன்பின்னர், 08.04.2026 ஆம் தேதி வரை மனுதாரருக்கு போதிய கால அவகாசம் இருந்தும் மனுதாரர்/எதிர்மனுதாரர், எதிர்மனுதாரர்/ மனுதாரருக்கு செலுத்த வேண்டிய ரூ.5,000/−ஐ செலுத்தாமல் இருந்திருப்பதை அறிய முடிகிறது.

**13.** மேலும், இம்மனு எழுந்திருக்கக் கூடிய D.V.C.No.6/2023 என்ற வழக்கில் மனுதாரர்/எதிர்மனுதாரர் வழக்கின் அறிவிப்பு சார்வுக்கு பின்னரும் கூட நீதிமன்றத்தில் ஆஜராகாததால். கடந்த 06.10.2023 ஆம் தேதி அன்று ஒருதலைபட்சம் ஆக்கப்பட்டுள்ளார். அதன்பின்னர், 09.11.2023 ஆம் தேதி ஒருதலைபட்ச உத்தரவு ரத்து செய்யக்கோரி சி.ஆர்.எல்.எம்.பி.எண்.6758/2023 என்ற மனு அனுமதிக்கப்பட்டு, 06.10.2023 ஆம் தேதியிட்ட ஒருதலைபட்ச உத்தரவு ரத்து செய்யப்பட்டுள்ளது. அதன்பின்னர், மனுதாரர்/1 ஆம் எதிர்மனுதாரர் ஆஜராகாததால், மறுபடியும் 22.04.2025 ஆம் தேதி அன்று ஒருதலைபட்சம் ஆக்கப்பட்டு அதன்பின்னர், கடந்த 20.05.2025 ஆம் தேதி அன்று ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்ய கோரி சி.ஆர்.எல்.எம்.பி.எண்.500/2025 என்ற மனு அனுமதிக்கப்பட்டு, மனுதாரர்/எதிர்மனுதாரர் ரூ.5,000/−ஐ எதிர்மனுதாரர்/ மனுதாரருக்கு 08.04.2025 ஆம் தேதிக்குள் செலுத்தும் பட்சத்தில் ஒருதலைப்பட்ச உத்தரவானது ரத்து செய்யப்படும் என்று உத்தரவிடப்பட்டிருந்தது. ஆனால் இம்மனுவின் மனுதாரர்/எதிர்மனுதாரர் உத்தரவு காலத்திற்குள் ரூ.5,000/−ஐ போதுமான கால அவகாசம் இருந்தும் செலுத்தாமல் இருந்து வந்துள்ளார்.

**14.** மேற்படி வழக்கின் வரலாற்றை பரிசீலனை செய்தபோது, இம்மனுவின் மனுதாரர் நீதிமன்றத்தில் சரிவர ஆஜராகாமலும், ஒன்றுக்கு மேற்பட்ட முறை ஒருதலைப்பட்சம் ஆக்கப்பட்டு ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதையும், மனுதாரரால் தேவையற்ற காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்பதையும் அறிய முடிகிறது. மேலும் 30.03.2026 ஆம் தேதியிட்ட உத்தரவின் நிபந்தனையை மனுதாரர் நிறைவேற்றாததற்கான காரணம் நீதிமன்றத்தை திருப்திப்படுத்தும் வகையில் மனுதாரரால் நிரூபணம் செய்யப்படவில்லை. மேலும், மனுதாரர்/எதிர்மனுதாரர் மனுவிற்கு ஆதரவாக தாக்கல் செய்துள்ள மருத்துவ சான்றுகளில் நிபந்தனை தொகையான ரூ.5,000/-ஐ செலுத்தும் காலத்தில் சிகிச்சையில் இருந்ததாகவோ, உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டிருந்ததாகவோ எவ்வித சான்றும் இந்த நீதிமன்றத்தில் முன்வைக்கப்படவில்லை.

**15.** மேற்சொன்ன காரணங்களாலும், இந்த மனு அனுமதிக்கப்பட்டால் தேவையற்ற காலதாமதம் ஏற்படும் என்பதை கருத்தில் கொண்டும், நீதியின் நலன் கருதியும் இந்த மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. மேலும், இம்மனுவின் மனுதாரர் எவ்வித காலதாமதம் இன்றி நீதிமன்றத்தில் நேரடியாகவோ, வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி துரிதமாக குடும்ப வன்முறை தடுப்புச் சட்டத்தின் கீழான வழக்கை நடத்தி முடிக்க உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் அலுவலக கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13 ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

PRAVEENA SUBBARAYAN

Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.08.13 18:14:15 +0530

நீதித்துறை நடுவர்,
ஒட்டன்சத்திரம்.